***கவனிக்க.**-2023.03.31 ஆந் திகதிய 2326 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2327 - 2023 අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06**

*2327 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 42 |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023 ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

**பிசுக்கால் ஏலத்தில் விற்பனை**
**மாவட்ட நீதிமன்றம், குருநாகல்.**

மக்கள் வங்கி, இல. 75, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.

*வாதி*

*எதிர்*

வழக்கு இலக்கம்: 1818/அடகு

1. நெய்னா முஹம்மது முஹம்மது முனாஃப், இல. 67, தம்புள்ள வீதி, தோரயாய, குருநாகல்

2. முகமது ஜலீல் ஸதிகாபேகம், இல. 67, தம்புள்ள வீதி, தோரயாய, குருநாகல்.

*பிரதிவாதிகள்*

மேற்படி இலக்கம் கொண்ட வழக்கில் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளான நெய்னா முஹம்மது முஹம்மது முனாஃப் மற்றும் மொஹமட் ஜலீல் ஸதிகாபேகம் ஆகியோர் மக்கள் வங்கிக்கு முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து இருபத்தாறு ரூபா ஒரு சதம் (ரூ.39, 43, 026,01) ரூபாவை மற்றும் அத்தொகைக்கு 2016.01.01 முதல்2016.06.29 ஆந் திகதி வரை 12.5% வீதத்தில் வட்டித் தொகையையும் 2019.11.29 ஆந் திகதி முதல் முழுமையான தொகையைச் செலுத்தும் தினம் வரை சட்ட ரீதியான வட்டித் தொகையையும் நீதிமன்றக் கட்டணத் தொகையையும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி பிரதிவாதிகள் அப்பணத்தை முறையாக செலுத்தத் தவறியதால், குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட மேலதிக அதிகாரத்தின் அடிப்படையில், பின்வரும் அட்டவணையில் அசையாச் சொத்தின் மீதான உரிமைகள் மற்றும் அதற்கு அனைத்தும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு குறிப்பிடப்பட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

**மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வெவுடவில்லி ஹற்பத்து, மஹகல்பொட மெகொட கோரளை , குருநாகல் பிரதேச சபை பிரதேசம், மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு, இலக்கம் 741, நாரம்பொல கிராம அலுவலர் பிரிவு, கிரிவவுல எனும் ஊரில் அமைந்துள்ள “கொங்கஹகொடுவேஹேன தற்போது தோட்டம் மற்றும் மெதகொங்கஹாகொடுவ” எனப்படும் காணிக்கு 2015.01.17 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் திரு. டி.எம்.பி.பீ. ரம்புக்வெல்ல அவர்களால் அளவீடு செய்யப்பட்ட வரைபிலுள்ள இலக்கம் 5594, லொட் 1 எனும் காணியின் எல்லைகள்.

வடக்கு: வரைபு இலக்கம் 2614 ஏ வரைபின் லொட் இலக்கம் 02 ஐக் கொண்ட 20 அடி அகலமான வீதி;
கிழக்கு: இலக்கம் 2614 ஏ வரைபின் லொட் இலக்கம் 01 ஐக் கொண்ட சமன் உரிமைகோரும் நிலம்;
தெற்கு: இலக்கம் 5015 வரைபின் லொட் இலக்கம் 04;
மேற்கு: இலக்கம் 2614 ஏ வரைபின் லொட் இலக்கம் 03 ஐ கொண்ட கமகே உரிமைகோரும் நிலம்.

பதினெட்டு பேர்ச் கொண்ட எல்லைக்குள் அமைந்துள்ள (00ஏ.00றூ.18பே.) பெரிய நிலம் மற்றும் அதில் உள்ள அனைத்து கட்டிடங்கள், மரங்கள், பழங்கள் மற்றும் அவ்வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளின் பொதுவான பயன்பாடு மற்றும் பராமரிப்பு உரிமை.

இக்காணி குருநாகல் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் ஜே 73/102 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சொத்தின் அமைவிடம்.- குருநாகல் மக்கள் வங்கிக்கிளையிலிருந்து தம்புள்ளை வீதியில் தம்புள்ளை நோக்கி சுமார் 7 கி.மீ. தொலைவில், கிரிவவுலசந்தியின் இடதுபுறத்திலுள்ள பல்லேஹவத்தை வீதியில் சுமார் 200 மீற்றர் செல்லும் போது இடதுபுறத்தில் சந்திக்கும் இரண்டாவது குறுக்குப் பாதையில் 20 மீற்றருக்குப் பின் இடது புறத்தில் தொடர்புடைய சொத்து அமைந்துள்ளது.

பணம் செலுத்தும் முறை.- ஏலம் முடிந்த உடனேயே, வெற்றிகரமாக வாங்குபவர்,

(1) வாங்கிய விலையில் 25%;
(2) பிஸ்கல் கட்டணம் சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 258 இன் படி பிஸ்கல் கட்டணம் மற்றும்;
(3) விற்பனைக்கான அனைத்து செலவுகளையும் பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% கொள்முதல் விலையை விற்பனை செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

ஈ.எம். பொடிமெனிக்கே,
பதிவாளர்/துணை பிஸ்கல்,
மாவட்ட நீதிமன்றம், குருநாகல்.

2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆந் திகதி.

04- 156

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |
| **மே** | .. | வியாழன் | 04.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2023 |
| | | வெள்ளி | 12.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2023 |
| | | வெள்ளி | 19.05.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.05.2023 |
| | | வெள்ளி | 26.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2023 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2023 |
| | | வெள்ளி | 09.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2022 |
| | | வெள்ளி | 16.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2023 |
| | | வெள்ளி | 23.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2023 |
| | | வெள்ளி | 30.06.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.